www.Padasalai.Net www.CBSEtips.in

V11His

விருதுநகர் மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 11

நேரம் : 3.00 மணி

வரலாறு

மதிப்பெண்கள்: 90

பகுதி - I

20×1=20

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) மெஹர்கார் ............. பண்பாட்டுடன் தொடர்புடையது.

அ) பழைய கற்காலம் ஆ) புதிய கற்காலம்

இ) இடைக் கற்காலம் ஈ) செம்பு காலம்

2) தொடக்க ஹரப்பா காலகட்டம் என்பது ............. ஆகும்.

அ) பொ.ஆ.மு. 3000 - 2600 ஆ) பொ.ஆ.மு. 2600 - 1900

இ) பொ.ஆ.மு. 1900 - 1700 ஈ) பொ.ஆ.மு. 1200 - 1500

3) வேதப் பாடல்களின் முக்கிய தொகுப்பின் பெயர் .............

அ) பிராமணங்கள் ஆ) சம்ஹிதைகள்

இ) ஆரண்யகங்கள் ஈ) உபநிடதங்கள்

4) **கூற்று** : முற்கால வேதகாலத்தில் குழந்தைத் திருமணம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை.

**காரணம்** : பின் வேதகாலத்தில் பெண்கள் சடங்குகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டனர்.

அ) கூற்றும் காரணமும் சரியானவை. காரணம் கூற்றை விலக்குகிறது.

ஆ) கூற்றும் காரணமும் சரியானவை. ஆனால் காரணம் கூற்றை விலக்கவில்லை.

இ) கூற்று சரியானது. காரணம் தவறானது.

ஈ) கூற்று காரணம் இரண்டும் சரியானது.

5) வட இந்தியாவில் 16 மகாஜனபதங்களில் வலிமை படைத்ததாக வளர்ந்த அரசு ............. ஆகும்.

அ) கோசலம் ஆ) அவந்தி இ) மகதம் ஈ) குரு

6) மகதத்தின் முதல் அரசராக அறியப்படுபவர் ஹர்யங்கா வம்சத்தைச் சேர்ந்த .............

அ) பிம்பிசாரர் ஆ) அஜாதசத்ரு

இ) அசோகர் ஈ) மகாபத்ம நந்தர்

7) ............. நல்ல நிர்வாகம் பற்றிய வழிகாட்டும் நூலாகும்.

அ) அர்த்தசாஸ்திரம் ஆ) இண்டிகா

இ) ராஜதரங்கினி ஈ) முத்ரராட்சசம்

8) அசோகரது தூண்களில் உள்ள பிராமி எழுத்துகளுக்கு பொருள் கண்டுபிடித்தவர்

அ) தாமஸ் சாண்டர்ஸ் ஆ) ஜேம்ஸ் பிரின்செப்

இ) சர்ஜான் மார்ஷல் ஈ) வில்லியம் ஜோன்ஸ்

9) இக்சவாகுகள் ............. பகுதியில் வலிமை பெற்றிருந்தனர்.

அ) ஆந்திரா - கர்நாடகா ஆ) ஒடிசா

இ) தக்காணம் - குஜராத் ஈ) பனவாசி

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


10) கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது?
i) தலையாலங்கானம் - நெடுஞ்செழியன்
ii) பட்டினப்பாலை - உருத்திரங்கண்ணனார்
iii) கஜுபாகு - இலங்கை
iv) திருவஞ்சிக்களம் - சோழர்
அ) i ஆ) ii இ) iii ஈ) iv

11) ஐரோப்பாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வணிகத்தின் தன்மைகள் பொது ஆண்டின் தொடக்கத்தில் மாறியதற்குக் காரணம்
i) பொ.ஆ.மு. கடைசி நூற்றாண்டின் முடிவில் மத்திய தரைக்கடல் உலகின் பெரும் சக்தியாக ரோம் எழுச்சியுற்றது.
ii) அரேபியக் கடலில் வீசும் பருவக்காற்றுகளின் காலமுறை இயல்புகள் பொ.ஆ. முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸால் கண்டுபிடிக்கப்பட்டது.
அ) (i) சரி ஆ) (ii) சரி
இ) (i), (ii) இரண்டுமே சரி ஈ) (i), (ii) இரண்டுமே தவறு

12) இந்தோ-கிரேக்க அரசர்களில் நன்கறியப்பட்டவர் .............
அ) யூதிடெமஸ் ஆ) டெமெட்ரியஸ்
இ) மினாண்டர் ஈ) ஆண்டியால்ஸைடஸ்

13) தர்க்கம் குறித்த முதல் முழுமையான பௌத்த நூலை எழுதியவர் .............
அ) திக்நாதர் ஆ) வசுபந்து இ) சந்திரகாமியா ஈ) வராகமிகிரர்

14) .............க்குக் கவிராஜா என்ற பட்டம் அளிக்கப்பட்டது.
அ) முதலாம் சந்திரகுப்தர் ஆ) சமுத்திரகுப்தர்
இ) இரண்டாம் சந்திரகுப்தர் ஈ) ஸ்ரீகுப்தர்

15) கீழ்க்கண்டவற்றுள் ஹர்ஷரால் எழுதப்பட்ட நூல் எது?
அ) ஹர்ஷசரிதம் ஆ) பிரியதர்சிகா
இ) அர்த்தசாஸ்திரா ஈ) விக்ரம ஊர்வசியம்

16) பிரபாகரவர்த்தனர் தனது மகள் ராஜ்யஸ்ரீயை ............. என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தார்.
அ) கிரகவர்மன் ஆ) தேவகுப்தர் இ) சசாங்கன் ஈ) புஷ்யபுத்திரர்

17) தேர்ந்தெடுத்துப் **பொருத்துக:**
i) சிம்மவிஷ்ணு - 1. சாளுக்கிய அரசன்
ii) முதலாம் ஜெயசிம்மன் - 2. பல்லவ அரசன்
iii) முதலாம் ஆதித்தன் - 3. கப்பல்தளம்
iv) மாமல்லபுரம் - 4. சோழ அரசன்
அ) 4, 3, 1, 2 ஆ) 4, 1, 2, 3 இ) 2, 1, 4, 3 ஈ) 4, 3, 2, 1

18) அயல்நாட்டு வணிகர்கள் ............. என்று அறியப்பட்டனர்.
அ) பட்டணசாமி ஆ) நானாதேவி இ) விதேசி ஈ) தேசி

19) உலகப் புகழ்பெற்ற கஜீராஹோ கோவிலைக் கட்டியவர்கள் .............
அ) ராஷ்டிரகூடர் ஆ) டோமர் இ) சண்டேளர் ஈ) பரமர்

20) இபின் பதூதா ஒரு ............. நாட்டுப் பயணி.
அ) மொராக்கோ ஆ) பெர்சியா இ) துருக்கி ஈ) சீனா

www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## பகுதி - II

குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×2=14
வினா எண் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21) ஹோமினின் குறித்து சிறுகுறிப்பு வரைக.
22) ஜெனட் அவஸ்தாவைப் பற்றி எழுதுக.
23) நமது ஆய்வுக்குச் சான்றாக உள்ள திரிபீடகங்களை எழுதுக.
24) எதன் காரணமாக மகா அலெக்சாண்டர் போரஸின் அரியணையை திருப்பித் தந்தார்?
25) பண்டமாற்று முறையை விளக்குக.
26) "யவன" என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
27) அலகாபாத் தூண் கல்வெட்டுக் குறித்துக் கூறுக.
28) தக்கோலப் போரின் முக்கியத்துவம் குறித்துக் கூறுக.
29) ஐஹோல் கல்வெட்டு குறித்து சிறுகுறிப்பு வரைக.
30) நாற்பதின்மர் அமைப்பு.

## பகுதி - III

குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21
வினா எண் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

31) இந்தியாவின் இடைப் பழங்கற்காலத்தின் முக்கியக் கூறுகளை எழுதுக.
32) ரிக்வேதகால சமூகப் பிரிவுகளைக் கோடிட்டு காட்டுக.
33) காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு குறித்து மதிப்பிடுக.
34) கங்கைச் சமவெளி முடியாட்சிகளின் அம்சங்களை விளக்குக.
35) கௌதமிபுத்திர சதகர்னியின் சாதனைகள்.
36) மினாண்டர் குறித்து நீங்கள் அறிந்தவை யாது?
37) விக்ரமசீலா பல்கலைக்கழகம் குறித்து சிறுகுறிப்பு தருக.
38) குப்தர் காலத்தில் அறிவியல் வளர்ச்சி குறித்து விவரிக்கவும்.
39) மாலிக்காஃபூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள் குறித்து எழுதுக.
40) எல்லோராவிலுள்ள கைலாசநாதர் குகைக்கோவில்.

## பகுதி - IV

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7×5=35

41) அ) திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்களைப் பற்றி விவாதிக்க.

42) அ) பொ.ஆ.மு. ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவு மலர்ச்சிக்கான காரணங்கள் யாவை?

(அல்லது)

ஆ) மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகளை விவரிக்கவும்.

43) அ) மூவேந்தர் அரசுகளுடைய நிர்வாகக் கட்டமைப்பை விவரிக்கவும்.

(அல்லது)

ஆ) கலைக்கும் இலக்கியத்துக்குமான கனிஷ்கரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கவும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



44) அ) குப்தர் காலம் ''பண்டைய இந்தியாவின் பொற்காலம்'' விவாதிக்கவும்.

**(அல்லது)**

ஆ) ராஷ்டிரகூடர்களின் சிறப்புகள் யாவை?

45) அ) பல்லவர்களின் கப்பல் சார்ந்த செயல்பாடுகளை விவாதி.

**(அல்லது)**

ஆ) இந்தியா வரலாற்றில் இரண்டாம் தரெய்ன் போர் திருப்புமுனையாக அமைந்தது எவ்வாறு?

46) அ) களப்பிரர் என்போர் யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சிக் கல்வெட்டிலிருந்து அறிந்து கொள்வதென்ன?

**(அல்லது)**

ஆ) **கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் ஹர்ஷப் பேரரசில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்:**

(i) தானேசுவரம் (ii) கன்னோசி (iii) நாளந்தா

(iv) புத்தகயா (v) உஜ்ஜையினி

47) அ) வட இந்தியாவின் நிலை குறித்த யுவான் சுவாஸ்கின் கருத்துகள் யாவை?

**(அல்லது)**

ஆ) குப்தப் பேரரசில் நடந்த முக்கிய நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் வரைந்து காட்டுக.

----------

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com